முருகப்பெருமான் துணை

**மகான் வரதரிஷி அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**27.08.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. ஞானிகளை வணங்கித் தேற
நல்வழி காட்டி வந்தநல்
ஞானியே ஆறுமுக அரங்கனே
ஞாலமதில் உன்பெருமை கூறி
2. கூறியே சோபகிருது யாளி திங்கள்
குறைவிலா தசதிகதி கதிர்வாரம்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 10ம் நாள், 27.08.2023, ஞாயிற்றுக்கிழமை)
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
தேசிகன் கேட்க வரதரிஷி யானும்
3. யானுரைக்க உலகோர் நலம்பெற
உயர்வு ஞானமாக அடைய உரைப்பேன்
தானதரும மகா சக்திபட
தனிப்பெருங் கருணையாக அருளும்
4. அருளும் அரங்கன் பெருமையை
அளவிலா வசிஸ்டமகரிஷி கூறிய
அறிவுரை ஆசி முழுதும் உண்மை
அரங்கன் பலம் அறிபவர் தேறுவர்
5. தேறுவர் இணைந்து தொடர்ந்து
திறம் கூடி மாறுவர் ஞானவானாக
ஆறுதலாக வாழ்வில் அனைத்துமாக
அரங்கன் இருப்பதை உணருவர்
6. உணரவே தானாக ஞானம்
உண்மை பொருள் விளங்கி
தானதரும நெறிவிட்டு அகல
தருமவான்களாக அடையாளம் கூட்டி

7. கூட்டியே உலகம் எங்கிலும்
குருவரங்கன் அவதார மகிமை
காட்டிடும் தொண்டர்களாக
கலியில் சிறந்து நிற்பர்

8. நிற்கவே எங்கும் அரங்கன்
நிலைத்தன்மை கொண்டுமே
ஏற்பு கொண்டப் படைகளாக
எல்லாத் திக்கிலும் தொண்டர்கள்படை

9. தொண்டர்கள் படை பெருகி
தெரிவிப்பேன் அஞ்ஞானம் விலகி
உண்டாகும் மெய்ஞான வாழ்வாக
உலகமெங்கும் இந்தவித சக்தி

10. சக்தி வழிகாட்ட சகலருமே
சடாட்சர பலமாக மாறி
சக்திமிகு சத்திய ஞானயுகம்
சன்மார்க்கம் சமத்துவமும் நிறைந்த

11. நிறைந்த ஞானலோகம் படைப்பர்
நீதி நெறி கொண்ட ஆட்சி
நிறைந்த ஆளுமை படைப்பர்
நிகழ்த்திய அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—